3 நவம்பர் 2024
பொதுக்காலம் ஆண்டின் 31 ஆம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH

newbec

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:**

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள்

நமக்கு முன் நம்மை விட்டுப் பிரிந்தவர்களை நினைவு கூர்தல்

# நடைமுறை அன்பு என்பது நம்பிக்கையின் இதயம்



இன்றைய முதல் வாசகத்தில் "ஷேமா" (யூதர்களின் அன்றாட இறைவேண்டல்) "இஸ்ரயலே, செவிகொடு" நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே ஆண்டவர். உன் முழு இதயத்தோடும், உன் முழு உள்ளத்தோடும், உன் முழு ஆற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக" இந்த அன்பின் அழைப்பு கடவுளோடு ஆழமான, உண்மையான மற்றும் மாற்றத்தக்க உறவை வளர்க்க நமக்கு நினைவூட்டுகிறது.

மறைநூல் அறிஞர் ஒருவர் இயேசுவிடம் வந்து, "முதன்மையான கட்டளை எது" என்று கேட்கிறார். இயேசுவும் கடவுளின் அன்பையும், அடுத்திருப்பவருக்கு காட்டும் அன்பையும் இணைப்பதன்மூலம் இயேசு அன்பிற்கான அழைப்போடு பதில் கூறுகிறார். இயேசு நம்மிடமும் இதுபோன்ற அர்ப்பணிப்பு நிறைந்த அன்பைத் தான் கேட்கிறார். கடவுளை அன்பு செய்வது, நம் வாழ்வில் அவருடைய பிரசன்னத்தை நினைவில் வைப்பது மட்டுமல்ல, மற்றவர்களுடனான நமது தொடர்புகளில் இந்த அன்பு எவ்வாறு வெளிப்படுகிறது என்பதைப் பற்றி சிந்திக்கவும் நம்மைத் தூண்டுகிறது. இயேசுவின் போதனைகள் ஆழமான உண்மைக்கு நம்மை வழிநடத்துகின்றன. அன்பு நம்முடைய நம்பிக்கையின் இதயத்தில் உள்ளது. இந்த அன்பு நம்மை நேர்மையோடு செயல்படவும், இரக்கத்தைக் காட்டவும், மற்றவர்களின் நல்வாழ்வைத் தேடவும் நம்மைத் தூண்டுகிறது.

எனவே, நாம் நம்மையேக் கேட்டுக்கொள்ள வேண்டும். நமது அதிச அல்லது அண்டை அயலாரிடையே, தேவையுள்ளோருக்கு நம்முடைய ஆதரவையும் உதவியையும் வழங்குகின்றோமா? வயதில் மூத்தவர்களைச் சந்திக்கச் செல்லும்போது ஆலய செய்தி அறிக்கை, அல்லது ஹெரால்ட் பத்ததிரிகையை எடுத்துச் செல்கிறோமா? அன்புக்குரியவர்களை இழந்து நிற்போருக்கு ஆறுதல் வார்த்தைகளை சொல்வது, தொடர்ந்து ஏழுநாட்கள் இறைவேண்டலில் கலந்துகொள்வது போன்றவற்றைச் செய்கிறோமா? ஒவ்வொரு ஞாயிறும் திருப்பலிக்கு செல்லும் நாம், அடுத்திருப்பவரின் தேவைகளைக் கண்டும் காணாமல் இருப்பது, இன்றைய நற்செய்தியின்படி, பாதி வாழ்க்கை தான் வாழ்ந்திருக்கிறோம்.

கடவுளை அன்பு செய்வது மற்றும் அடுத்திருப்பவரை அன்பு செய்வது ஒன்றுக்கொன்று தொடர்புடையது என்று சிந்திக்க நாம் அழைக்கப்படுகிறோம். அன்பு செலுத்துவதற்கு மட்டுமல்ல, நடைமுறை வழிகளில் அன்பை உருவாக்குவதற்கும் நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதே நம் கோட்பாடு. இது நம் வாழ்க்கையையும் நம்மைச் சுற்றியுள்ள உலகத்தையும் மாற்றக்கூடிய செயலுக்கான அழைப்பு.

தனது சொந்த மரணத்தை இயேசுவின் மரணத்துடன் இணைக்கும் ஒரு கிறிஸ்துவர் அதை இயேசுவை நோக்கிய நிலைவாழ்வுக்கு நுழையும் ஒரு படியாகக் கருதுகிறார்.
(கமபோ 1020)







**இன்றைய இறைவார்த்தை:**

இணைச்சட்டம்: 6: 2-6

திபா: 18: 2-4, 47,51

எபிரேயர்: 7: 23-28

மாற்கு 12: 28-34

INTERNAL CIRCULATION ONLY
BUL 44/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org